# பெரியாழ்வார் திருமொழி 4-9

## மரவடியை

(திருவரங்கம் பெரியகோயிலின் பெருமை 2)

412 * மரவடியைத் தம்பிக்கு * வான்பணையம் வைத்துப் போய்
வானோர் வாழ *
செருவுடைய திசைக் கருமம் * திருத்தி வந்து உலகாண்ட
திருமால் கோயில் **
திருவடிதன் திருவுருவும் * திருமங்கை மலர்கண்ணும் காட்டி
நின்று *
உருவுடைய மலர் நீலம் * காற்றாட்ட ஓசலிக்கும் ஒளி
அரங்கமே (1)

413 * தன்னடியார் திறத்தகத்துத் * தாமரையாளாகிலும்
சிதகுரைக்குமேல் *
என்னடியார் அது செய்யார் * செய்தாரேல் னன்று செய்தார்
என்பர் போலும் *
மன்னுடைய விபீடணற்கா * மதிள் இலங்கைத் திசை நோக்கி
மலர்கண் வைத்த *
என்னுடைய திருவரங்கற்கன்றியும் * மற்றொருவர்க்கு ஆளாவரே (2)

414 கருளுடைய பொழில் மருதும் * கதக்களிறும் பிலம்பனையும்
கடிய மாவும் *
உருளுடைய சகடரையும் மல்லரையும் * உடைய விட்டு ஓசை
கேட்டான் **
இருள் அகற்றும் எறிகதிரோன் * மண்டலத்தூடு ஏற்றி வைத்து
ஏணி வாங்கி *
அருள் கொடுத்திட்டு அடியவரை * ஆட்கொள்வான் அமருமூர்
அணியரங்கமே (3)

415 பதினாறாமாயிரவர் * தேவிமார் பணி செய்ய * துவரை என்னும்
அதில் நாயகராகி வீற்றிருந்த * மணவாளர் மன்னு கோயில் **
புது நாண்மலர்க் கமலம் * எம்பெருமான் பொன்வயிற்றில் பூவே
போல்வான் *
பொது நாயகம் பாவித்து இருமாந்து * பொன் சாய்க்கும் புனல்
அரங்கமே (4)

416 ஆமையாய்க் கங்கையாய் * ஆழ்கடலாய் அவனியாய்
அருவரைகளாய் *

நான்முகனாய் நான்மறையாய் * வேள்வியாய்த் தக்கணையாய்த்
தானுமானான் **
சேமமுடை நாரதனார் * சென்று சென்று துதித்திறைஞ்சக்
கிடந்தான் கோயில் *
பூமருவிப் புள்ளினங்கள் * புள்ளரையன் புகழ் குழறும் புனல்
அரங்கமே (5)

417 மைத்துனன்மார் காதலியை * மயிர் முடிப்பித்து அவர்களையே
மன்னராக்கி *
உத்தரை தன் சிறுவனையும் * உய்யக் கொண்ட உயிராளன்
உறையும் கோயில் **
பத்தர்களும் பகவர்களும் * பழமொழி வாய் முனிவர்களும்
பரந்த நாடும் *
சித்தர்களும் தொழுதிறைஞ்சத் * திசை விளக்காய் நிற்கின்ற
திருவரங்கமே (6)

418 குறட் பிரமசாரியாய் * மாவலியைக் குறும்பதக்கி அரசு வாங்கி *
இறைப் பொழிதில் பாதாளம் கலவிருக்கை * கொடுத்துகந்த
எம்மான் கோயில் **
எறிப்புடைய மணிவரை மேல் * இளஞாயிறு எழுந்தாற்போல்
அரவணையின் வாய் *
சிறப்புடைய பணங்கள் மிசைச் * செழுமணிகள் விட்டெறிக்கும்
திருவரங்கமே (7)

419 உரம் பற்றி இரணியனை * உகிர்நுதியால் ஒள்ளிய மார்புறைக்க
ஊன்றி *
சிரம் பற்றி முடியிடியக் கண் பிதுங்க * வாயலரத் தெழித்தான்
கோயில் **
உரம் பெற்ற மலர்க் கமலம் * உலகளந்த சேவடிபோல் உயர்ந்து
காட்ட *
வரம்புற்ற கதிர்ச் செந்நெல் * தாள் சாய்த்துத் தலை வணக்கும்
தண்ணரங்கமே (8)

420 தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் * அரியாய்க் குறளாய் *
மூவுருவின் இராமனாய்க் * கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான்
கோயில் **
சேவலொடு பெடை அன்னம் * செங்கமல மலரேறி ஊசலாடி *
பூவணைமேல் துதைந்தெழு * செம்பொடியாடி விளையாடும்
புனல் அரங்கமே (9)

421 செருவாளும் புள்ளாளன் மண்ணாளன் * செருச்செய்யும் நாந்தகம்
என்னும்
ஒருவாளன் * மறையாளன் ஓடாத படையாளன் *
விழுக்கையாளன் **
இரவாளன் பகலாளன் என்னையாளன் * ஏழுலகப் பெரும்
புரவாளன் *
திருவாளன் இனிதாகத் * திருக்கண்கள் வளர்கின்ற
திருவரங்கமே (10)

422 * கைந்நாகத்திடர் கடிந்த * கனலாழிப் படையுடையான் கருதும்
கோயில் *
தென்னாடும் வடநாடும் தொழ நின்ற * திருவரங்கம் திருப்பதியின்
மேல் **
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன் * விரித்த தமிழ்
உரைக்க வல்லார் *
எஞ்ஞான்றும் எம்பெருமான் இணையடிக் கீழ் * இணை
பிரியாதிருப்பர் தாமே (11)